தான் இந்தக் காலத்தை நாம் நிர்ணயித்து இருக்கிறோம். தொழிற்சங்கத் தலைவர்களும் சேர்ந்து பேசி எடுக்கப் பட்ட முடிவுதான் இது.

*வினா எண். 752

நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொழில் கருவிகள் வாங்கித் தரும் திட்டம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள தலைமை Co-optex-ல் பொது நலநிதி நெசவாளர் சங்க உறுப்பினர்களுக்குத் தொழில் கருவிகள் வாங்கிக் கொடுக்கும் திட்டம் 1962-ம் வருடத்திற்குப்பின் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி பணம் தற்பொழுது எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, 1962ஆம் ஆண்டு வரையில் தொழிற்கருவிகள் வாங்குவதற்கு சேம நிதியிலிருந்து ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அது ஏன் கொடுக்கவில்லை? நெசவாளர்களுடைய தொழிற் கருவிகள், அதாவது தறி, திருவள்ளுவர் காலத்து மாடலாக இருக்கிறது. மிதிப்பான்கள் மிதித்து செட்டில் தறியாக உள்ளது. ஆதலால் நவீனக் கருவிகள் வழங்க அரசுக்கு ஏதேனும் உத்தேசம் உள்ளதா? அப்படிக் கருவிகள் வழங்கும்போது மானியமாகக் கொடுக்கப் படுமா? கருவிகள் வாங்க எவ்வளவு தொகை கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதுபோல சேமநல நிதியிலிருந்து எந்தவித உதவியும் நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. 1962—ஆம் ஆண்டுக்கு முன்பு பொது நல நிதியிலிருந்து தொழில் கருவிகள் எதுவும் வாங்கித் தரப்பட வில்லை. ஆனால் தொழில் கருவிகள், மத்திய அரசால் கைத்தறி மற்றும் கதர் வளர்ச்சிக்காக நூற்பு மற்றும் நெசவாலைகளிலிருந்து 1-2-1953-க்குப் பிறகு உள்ளூர் தேவைக்காக உற்பத்தி செய்த மில் துணிகளின் மீது ஒரு கெஜத்திற்கு 3 பைசா வீதம் வரி வசூலிக்கப்பட்டு அத்தொகை 'செஸ் நிதி' என்ற ஒரு நிதியில் சேர்க்கப்பட்டு வந்தது. அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையிலிருந்து மத்திய அரசு மாநில அரசிற்கு ஒரு பகுதி வழங்கியது. அவ்வாறு பகிரப்

அரசிற்கு வழங்கிய செஸ் தொகையிலிருந்துதான் நெசவாளர்களுக்குத் தொழிற்கருவகள் வாங்கித் தரப்பட்டு வந்தன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், பழைய தறிகளையேத்தான் நெசவாளர்கள் உபயோகித்து வருகிறார்கள். புதுத் தறிகள் வாங்கித் தருவதற்கான திட்டங்கள் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இதைப் பொறுத்தவரையில், மத்திய அரசு தனது பொது நிதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கைத்தறி வளர்ச்சிக்காக மொத்தமாக ஒரு கணிசமான தொகையை மாநில அரசுக்கு அளித்து வருகிறது. அதனபடி கைத்தறி வளர்ச்சிக்காக மாநில அரசு செலவிடும் தொகையில் 50 சதவீதம் செலவை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும். மீதமுள்ள 50 சதவீதம் செலவை மாநில அரசு ஏற்கிறது. தற்போது நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நவீன தொழிற்கருவிகள் வாங்கவும், ஏற்கனவே உள்ள கருவிகளை நவீனப்படுத்தவும் தறி ஒன்றுக்கு ரூ. 2,500 வரை மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் ஒரு பங்கு மானியமாகவும் இந்த அரசு கொடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவாப்டெக்ஸ் மூலமாக 'இன்டர்நேஷனல்' என்ற தனி அமைப்பு வைத்து இருக்கிறார்கள். அந்தத் தனி அமைப்பு மூலமாக வெளிநாடுகளுக்குக் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது வெளிநாடு சென்று தொழில் நுணுக்கம் அறிந்து வந்ததுபோல், நெசவாளர் பொது நல நிதியிலருந்து செலவுசெய்து, நெசவாளர்கள் சங்கங்களின் தலைவர்கள் ஆண்டுக்கு 3 பேர் அல்லது இரண்டு பேர்களை கோவாப்டெக்ஸ் மூலமாகத் தொழில் நுணுக்கம் தெரிந்து வருவதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துக்கள் அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோவாப்டெக்ஸ் பொது நல நிதியில் தற்போது எவ்வளவு பணம் சேர்ந்துள்ளது? எந்தெந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியை ஒட்டி இல்லாத காரணத்தால் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் கொடுக்கப் படும்.

காட்பாடியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

வினா எண். 753 திரு. என். ஏ. பூங்காவனம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: